பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 13 வெள்ளிக்கிழமை (29-10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 335

### பல்கலைக் கழகத்துக்கான

# அனுமதி வெட்டை எதிர்த்து மாணவர் கண்டனப் பேரணி

## கொட்டும் மழையிலும் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஒக்டோபர் 29

பல்கலைக் கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் அரசு நடந்து கொண்டதை எதிர்த்து, யாழ் மாவட்ட மாணவர்கள் பிரமாண்டமான கண்டனப் பேரணியை நேற்று நடத்தினர்.

இந்தப் பேரணியில் கலந்து கொள்வதற்காக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆதரவாக, அவர்களுடன், பல்கலைக் கழக மாணவர்கள், பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் கொட்டும் மழையின் மத்தியிலும் அணி திரண்டனர். மழையில் நனைந்தவாறே பேரணியை நடத்தினர்.

1992 - 93 ஆம் கல்வி ஆண்டுக்கான அனுமதி முறையை மறுபரிசீலனை செய்யக் கோரியும், உரிய எண்ணிக்கையில் தமிழ் மாணவர்களை அனுமதிக்க வகை செய்யுமாறு கோரியும் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின்-

மாணவர்கள் அரசுக்கு எதிரான சுலோகங்களைக் கோஷித்தும், பதாகைகளைத் தாங்கியும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை ஒன்பது மணியளவிலேயே பெரும் மழை பொழியத் தொடங்கிய போதிலும், மாவட்டத்தின் சகல பகுதிகளில் இருந்தும் மாணவ, மாணவியர் யாழ் பல்கலைக்கழக வளவில் கூடத் தொடங்கினர். மழை சிறிது நேர இடைவெளிகளுடன் தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது.

எனினும் பல்கலைக் கழக வளாகத்தில் நடந்த கண்டனக் கூட்டத்தைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாகியது. கொட்டும் மழையில் நனைந்து கொண்டும், குடை பிடித்துக் கொண்டும் மாணவ மாணவியர் தமது பேரணியை நடத்தி முடித்தனர்.

பரமேஸ்வராச்சந்தி, பலாலி வீதி, அரசடிச்சந்தி, கந்தர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுப்புள்ளி வேட்டுப்புள்ளி!

யாழ்ப்பாணம், ஒக். 29

பல்கலைக் கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டனப் பேரணியில் எழுப்பப்பட்ட கோஷங்களில் சில வருமாறு:-

★ இரும்பில் படித்தும் இரக்கம் இல்லையா?
★ விளக்கில் படித்தும் விடிவு இல்லையா?
★ இரண்டு பரீட்சைகள் இரண்டு நாடு என்கின்றனவா?
★ வெட்டுப் புள்ளி தமிழன் கல்விக்கு வேட்டுப் புள்ளி!
★ உயர் கல்வி உனக்கு மட்டுமா? உலகம் சிரிக்கிறது!!
★ தகைமை உள்ளவனைத் தடுத்திடல் நியாயமா?
★ கொட்டும் குண்டுகளை விட வெட்டுப் புள்ளி வேறா?
★ வேண்டாம் இனி விசேட பரீட்சை. (அ-5)

## பிரபாவின் கருத்துக்களின் தொகுப்பு நூல் வடிவில்

யாழ்ப்பாணம், ஒக். 29

தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் கருத்துக்களின் தொகுப்பு நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக தலைவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகள் —

மற்றும் காலத்துக்குக் காலம் தமிழீழ விடுதலைப் போராட்ட சூழ்நிலையை விளக்கி அவர் வெளியிட்ட அறிக்கைகள் —

இத்துடன் சமூக பொருளாதார பண்பாட்டுப் பிரச்சினைகள் குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஆகியவை "எமது மக்களின் விடுதலைக்காக" என்ற தலைப்பில் பிரசுரமாகி உள்ளன.

815 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் தலைவரின் பல



புகைப்படங்களும் வெளியாகியுள்ளன. (இ-9)

## ஜனாதிபதியை சந்திப்பதை தவிர்த்தார் ஆதீன முதல்வர்

யாழ்ப்பாணம், ஒக். 29

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவைச் சந்திக்கத் தாம் விரும்பவில்லை என்றும்—

அதனால் அவருடன் நிகழவிருந்த சந்திப்பைத் தாம் தவிர்த்துக் கொண்டதாகவும்—

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

கடந்த மாதம் இருபதாம் திகதி ஜனாதிபதியும் ஆதீன முதல்வரும் சந்திப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்கு இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் முன் வந்தார் என்றும்—

ஆனால் ஜனாதிபதியை சந்திக்கத் தாம் விரும்பவில்லை என்று அமைச்சரிடம் கூறிவிட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் போக்கில் தொண்டமான் அதிருப்தி!

### எந்நேரமும் வெளியேறலாமாம்

கொழும்பு, ஒக். 29

அரசாங்கத்தின் சமீபத்திய போக்கினால் அமைச்சர் தொண்டமான் அதிருப்தி அடைந்துள்ளார் என்றும் —

அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றும்— வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தொண்டமான் தெரிவித்த யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படாது இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது —

ஜே. ஆர்., பிரேமதாச ஆகியோரின் காலத்தில் தொண்டமானின் பேச்சுக்கு இருந்த மதிப்பு தற்போதைய ஆட்சியில் இல்லாமல் போனது —

அரச தோட்டங்களை தனியாரிடம் கையளித்தது தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்துக்கு திருப்திகரமான பதில் கிடைக்காமை —

ஆகியவற்றால் தொண்டமான் அதிருப்தி அடைந்துள்ளார் என்றும் எதிரணியினருடன் கருத்துக்களை பரிமாறும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## அனுராவுக்குகல்வி அமைச்சர்பதவி?

கொழும்பு, ஒக். 29

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ள அனுரா பண்டாரநாயக்காவுக்கு கல்வி அமைச்சர் பதவி வழங்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கிறது

ஐ.தே.க. தலைவர்களுக்கும் அனுராவுக்கும் இடையில் பல நாட்களாக இரகசியப் பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றும் —

அமைச்சர் பதவிக்கான உத்தரவாதம் கிடைத்த பின்பே சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறும் முடிவை அனுரா எடுத்திருக்கிறாராம் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(முன் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

### பி. பி. ஸி. கண்ணோட்டம்

## சிங்கள - பௌத்த கொள்கைக்கு மிக நெருக்கமாக உள்ளார் விஜே!

லண்டன், ஒக் 29

சிங்கள — பௌத்த கொள்கையைப் பேண வேண்டும் என்ற கருத்துக்கு நெருக்கமாக இருக்கிறார் விஜேதுங்கா.

பௌத்த மதக் கோட்பாட்டை முனைப்புடன் பாதுகாக்க அவரது அரசு உறுதி பூண்டுள்ளது.

அடுத்த ஆண்டு நடக்கும் தேர்தலில் பெரும்பான்மை இனத்தவரை கவரும் நோக்கில் வகுக்கப்பட்டுள்ள தந்திரமே இது என்பது தெளிவாகத் தெரிகிறது.

"பிரேமதாசாவின் மரணத்துக்குப் பிறகு ஆறு மாதங்களுக்குப் பின்னர்" என்ற ஆய்வுக் கண்ணோட்டத்தில் பி.பி.ஸியைச் சேர்ந்த சிறில் மொறிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது கண்ணோட்டத்தில் ஏனைய முக்கிய [illegible] வருமாறு:-

வடக்கு - கிழக்கு யுத்தம் இன்னமும் தொடர்கிறது. அரசின் போக்கு இது விஷயத்தில் கடுமையாக இறுகி வருகிறது.

கடுமையான அரசியல் போக்கினையும் இணைத்து, வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு உறுதியான இராணுவ தீர்வைக் காண விஜேதுங்காவின் [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தச் செய்திகளை வெளியிட வேண்டாம்

### ராணுவ முகாம்களுக்கு உத்தரவு

கொழும்பு, ஒக். 29

வடக்கு - கிழக்கில் ராணுவ நடவடிக்கைகள், யுத்த ஏற்பாடுகள் பற்றிய தகவல்களை பத்திரிகைகளுக்கோ அல்லது வேறு பொதுசன தொடர்புச் சாதனங்களுக்கோ வழங்கவேண்டாம் என்று சகல இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்களை ஆதாரம் காட்டி வெரித்தாஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை பற்றிய தகவல்களை வெளியிடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவ தளபதி சார்பாக இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளர் பிரிகேடியர் லால் வீரசேகரா அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

### வெளியேறியோரின் வீடுகளில் உள்ள

## குடியிருப்பாளர்களை பதியுமாறு கோரிக்கை

வடபகுதியை விட்டு வெளியேறிய உரிமையாளர்களின் வீடுகளில் குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரிவில் உள்ள இயக்க நகர் பகுதி அலுவலகங்களில் தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க நகர் பகுதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

வலிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்கள் சுந்தர்மடம் இயக்க நகர் பகுதி அலுவலகத்திலும் —

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரி இயக்க நகர் பகுதி அலுவலகத்திலும் —

வடமராட்சி பகுதியைச்சேர்ந்தவர்கள் மாலுசந்தி இயக்க நகர் பகுதி அலுவலகத்திலும் பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

தங்கையே!
மின்னல் குடியிருக்கும் கண்ணைத் திற
விடுதலைக்குத் தேதி குறி
வண்ணக் கனவுகளைத் தூக்கி எறி
வா களத்துக்கு வரலாறு படைக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர் !

நிகழும் ஸ்ரீமுக வருஷம் ஐப்பசித் திங்கள் 14 ஆம் நாள் (30.10.1993) சனிக்கிழமை பிற்பகல் 3.20 முதல் 4.49 மணிவரை உள்ள அஸ்வினி நட்சத்திரமும், பௌர்ணமி திதியும், சித்த யோகமும் கூடிவரும் சுபமுகூர்த்த வேளையில்

| திரு திருமதி சுப்பிரமணியம் | திரு திருமதி தம்பிஐயா |
|---|---|
| (பண்ணாகை, தெல்லிப்பழை) | (கோப்பாய்) |
| அவர்களின் சிரேஷ்ட புதல்வன் | அவர்களின் ஏகபுத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **ஜெயதேவன்** | **நிவாசினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண வைபவ மண்டபம்: 'L 'ENTRECOTE' 7,Rue Christino Garcia,
93120 La Courneuve
(Metro/Tram: La Courneuve)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி சுப்பிரமணியம் — இலங்கை
திரு திருமதி சோமசுந்தரம் — பிரான்ஸ்
திரு. திருமதி சிவகுமார் — பிரான்ஸ்
திரு வசந்ததேவன் — பிரான்ஸ்

திரு திருமதி தம்பிஐயா — இலங்கை
திரு திருமதி பரமேஸ்வரன் — பிரான்ஸ்
திரு. த. ஸ்ரீதரன் - இத்தாலி
Tel: 48319799

(6705)

# மெதடிஸ்த திருச்சபை யாழ்ப்பாண சேகரம்

30-10-93 நடைபெறுவதாக இருந்த குரு அபிஷேக ஆராதனை தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

— முகாமைக்குரு.

(சி 6448)

# G.C.E. A/L - O/L
## ENGLISH LITERATURE

**Mr. S. THEIVATHAVAPALAN**

Vedio / Audio Materials Will be Used During Instruction.

**SAT. 4 00 P. m. (30-10-1993)**

**NEW SCIENCE ACADEMY**
KANNATHIDDY. (6566)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12 | 29 |
| — | — |
| 03 | 10 |
| — | — |
| 1916 | 1991 |

**PHILIP LIGORI SANTIAGO**
(Retd Asst. Conservator of Forests)

ஜீவியத்தில் உண்மை நேசித்த நாம்
மரணத்திலும் உண்மை மறவாதிருப்போம்

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

45/1, கிரான்லி கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (27819)

# யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம் - வரையறுக்கப்பட்டது
## 31–12–1991 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான
# கிராமியவங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 31-12-1991 இல் முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டு இருப்பதால், கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிகளில் தமது வங்கி சேமிப்பு கைபேடுகளுடன் இல. 291 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் வந்து தமது மீதிகளை உறுதிப்படுத்தி செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| | | |
|---|---|---|
| 03-11-1993 — 9.00 மணி முதல் 4.00 மணிவரை | க/கு இல | 01 — 746 |
| | | 50012 — 51200 |
| 04-11-1993 — 9.00 மணி முதல் 4.00 மணிவரை | | 51201 — 51550 |
| 05-11-1993 — 9.00 மணி முதல் 4.00 மணிவரை | | 51551 — 51941 |

மேற்குறிப்பிட்ட திகதிகளில் வந்து உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் க/கு. மீதிகள் வங்கியின் பேரேட்டின்படி உறுதிப்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ப. மலரகிதசர்மா
சிரேஷ்ட கணக்காய்வாளர்.

28-10-1993

(சி/6293)

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
## நடத்தும்
# "3 ஆவது" வதிவிட வேளாண்மைப் போட்டி
## 1993/1994 யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத ஒடுக்கு முறையின் இருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழி வகுத்துள்ளது.

இப் பணியில் செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர் கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகிறது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1993/94 காலப்பகுதியில் யாழ். குடா நாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4 பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டிக்கொள்கிறது.

**போட்டிகளுக்கான நிபந்தனைகள்:**

01. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர் செய்கையை கவர்ச்சிகரமாக அமைத்தல்.

02. 10 அடி நீளம் 8 அடி அகலமும் ஆன பாத்திகளில் உள்நாட்டு மரக்கறிப் பயிர்களான வெண்டி, மிளகாய், புடோல், பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு, அவரை, போன்றவையும் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களான கோஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றூட், கரட் போன்றவையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகை பயிர் இனங்களில் (3) மூன்று உள்நாட்டு மரக்கறி வகைகளும் மேல்நாட்டு மரக்கறி வகைகளில் இரண்டும் (2) செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும்.

அத்துடன் மரவள்ளி, வற்றாளை, போன்ற கிழங்கு வகைப் பயிர்களில் ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

சோளம், சம்பு, இறுங்கு, போன்ற தானியப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. 10 அடி நீளமும் 8 அடி அகலமுமான பாத்திகளில் இலைவகைகள் மரக்கறிப் பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, சங்குக் கீரை, வல்லாரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை, ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாதல் இருத்தல் வேண்டும்.

04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், வெந்தயம், மல்லி, கருவேப்பிலை, தம்பை போன்ற இனங்களில் மூன்று (3) நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

05. பழ மரங்களான பப்பாசி, வாழை, மாக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, மா, எலுமிச்சை ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று ... ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

07. கூட்டெரு, குழி முறையிலோ, குவியல் முறையிலோ மேற் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

08. தேனீ வளர்த்தல்:-
குறைந்தது ஓர் பெட்டியிலாவது அல்லது மரக் கொட்டிலிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

09. கோழி வளர்த்தல்:-
குறைந்தது (10) பத்து கோழிகள் (கூடு அமைப்பு) வளர்ப்பு முறையில் வளர்த்தல் வேண்டும்.

10. தாரா ஒரு சோடி வளர்த்தல் வேண்டும் அல்லது அதற்கு பதிலாக 5 கோழிகள் கூடுதலாக வளர்க்க வேண்டும்.

11. பசு மாடு ஒன்று அல்லது மறி ஆடு ஒன்று வளர்க்கப்பட வேண்டும். இவை இரண்டையும் வளர்ப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப் படும்.

12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.

13. விலங்கு தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள் முருக்கை, சீமை கிழுவை என்பன இருத்தல் வேண்டும்.

14. பதிவேடு பேணல்:-
மரக்கறி பயிர், கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப் படல் வேண்டும்.

**குறிப்பு:**

விண்ணப்ப படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலகம், கோட்டச் செயலகங்கள், கிராமிய உற்பத்தி குழு வட்டத் தொடர்பாளர்கள் அலுவலகங்களில் பெற்று பூரணப் படுத்தி 15-11-1993 ஆம் திகதி திங்கட்கிழமை நேரடியாகவோ, அல்லது கடிதமூலமாகவோ மேற் குறித்த அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிகமாக தேவைப்படும் விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட, வட்ட அலுவலகங்களிலும் கமநல சேவைத் திணைக்களத்திலும் விவசாய போதனாசிரியர்களிடமும், அரசசார்பற்ற நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மரக்கறி விதைகள் விண்ணப்பதாரிகளுக்கான பயிற்சிக் கூட்டத்தில் வைத்து இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இப் போட்டியில் கலந்து கொள்வோர் 15 - 11 - 1993 தொடக்கம் 15 - 12 - 1993 வரையுள்ள காலப்பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

**போட்டிகள் பார்வையிடும் காலம்**

முதலாம் கட்ட பார்வையிடுதல்
01—01—1994 தொடக்கம் 20—01—1994 வரையுள்ள காலப்பகுதி,
இரண்டாம் கட்ட பார்வையிடுதல்
01—02—1994 தொடக்கம் 15—02—1994 வரை.
இறுதிக் கட்ட பார்வையிடல்
20—02—1994 தொடக்கம் 29—02—1994 வரை.

(சி/6280)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபெருக்கி மூலம் அறிவித்து கொழும்பில் தேடுதல் வேட்டை

கொழும்பு, ஒக். 29
தீவிரவாதிகள் எனக் கருதப்படும் 15 பேரைத் தேடுவதாகக் கூறி கொழும்பில் கடந்த வாரம் பெரும் தேடுதல் வேட்டை ஒன்று நடத்தப்பட்டது.

ஒரே நாளில் களுபோவில, தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய பகுதிகளில் வீடுவீடாக தேடுதல் இடம்பெற்றது.

தேடுதல் வேட்டை ஆரம்பமாவதற்கு முன்னர் அந்தப் பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் சில அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன என்றும் —

தொடர்ந்து இடம்பெற்ற தேடுதலின்போது இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டனர் என்றும், தீவிரவாதிகளுக்கு புகலிடம் கொடுத்ததாகக் கூறப்படும் சிங்களவர்கள் இருவரும் கைதாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தளபதியையும் அரசியல் தலைவர்கள் சிலரையும் கொலை செய்வதற்கென கொழும்புக்கு 15 தீவிரவாதிகள் வந்திருப்பதாக படையினருக்கு தகவல் கிடைத்ததை அடுத்தே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

## அநுரா கொழும்பு வந்ததும் அமைச்சர் பதவி பற்றி முடிவு

லண்டன், ஒக். 29
தற்போது லண்டனில் உள்ள அநுரா பண்டாரநாயக்கா இன்னும் ஒரு சில நாள்களில் கொழும்பு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்கா தமது பொறுப்பில் ஆறு அமைச்சுக்களை தற்போது வைத்திருக்கிறார். அவற்றில் ஒன்றை அவர் அநுராவுக்கு வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

அநுராவுக்கு என்ன அமைச்சு வழங்குவது என்பது குறித்து அவர் கொழும்பு திரும்பும் வரை எந்த முடிவும் எடுக்கப்படாது என்று தெரிவிக்கப்படுகிறது.

அநுரா கொழும்பு திரும்பியதும், அரசுத் தலைவரையும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏனைய தலைவர்களையும் சந்தித்து தனது அரசியல் எதிர்காலம் பற்றி பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அநுரா விவகாரம் ஐ.தே.கவில் பெரும் பரபரப்பையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தினாலும் கட்சியின் ஏனைய மூத்த உறுப்பினர்களைச் சமாதானப்படுத்தும் வகையில் ஜனாதிபதி மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டி இருக்கும்.

ஐந்து ரூபாயுடன் உறுப்புரிமை கோரும் விண்ணப்பத்தை அநுரா அனுப்பி வைத்த பின்னர் தான் ஐ.தே. கட்சியின் உறுப்பினராக வர முடியும்.

— இப்படி பி பி ஸி தெரிவித்தது.

## பொதுமக்கள் மீது தாக்குதல்: 27 பொலீஸ்காரர்கள் பதவி நீக்கப்பட்டனர்

கொழும்பு, ஒக் 29
வாழைச்சேனை ஓட்டமாவடியில் பொதுமக்கள் 15 பேரைத் தாக்கி காயம் விளைவித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் 27 பேர் பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

— கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

பொதுமக்கள் 15 பேரைத் தாக்கிக் காயம் விளைவித்ததோடு பத்துக் கடைகளையும் சேதப்படுத்திய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்தே மேற்படி 27 பொலிஸ் உத்தியோகத்தர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கணித ஆய்வுகூடம்

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கடந்த 18 ஆம் திகதி கணித ஆய்வு கூடமொன்று திறந்து வைக்கப்பட்டது. இடைநிலை மட்ட மாணவிகளின் நன்மை கருதி அமைக்கப்பட்டுள்ள இந்த ஆய்வு கூடத்தை உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) திருமதி அ. வேதநாயகம் திறந்து வைத்தார்.


"அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்"
(எரே. 31: 9

## முழு இரவு ஐக்கிய ஜெபம்

"நாட்டின் அமைதி சமாதானத்திற்காக" சபைப் பாகுபாடற்ற இந்த ஜெபத்தில் அனைத்து தேவ மக்களும் கலந்து கொள்ளும்படி. அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: எபனேஸர் ஜெப நிலையம்
வட்டுக்கோட்டை

காலம்: 29–10–93 வெள்ளிக்கிழமை இரவு

நேரம்: மாலை 7 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரை

(வியாதியஸ்தர்களுக்காகவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்

சபைப் போதகர், ஊழியர்கள், விசுவாசிகள்.

(27792)



பனை அபிவிருத்திச் சபை

## மரம் நடுகை வாரம் (26-10-1993 - 01-11-1993) பனம் விதை நடுகை

மரம் நடுகை வாரத்தையொட்டி, யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பனம் விதைகள் நடுகை இயக்கத்தைச் சபை மேற்கொண்டுள்ளது. விதைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள விரும்பும் சமூகசேவை நிறுவனங்கள் மற்றும் தனியார் உடன் தொடர்பு கொள்ளவும்.

முளைதிறன் உள்ள தரமான பனம் விதைகள் 50 சதவீதம் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு:

அபிவிருத்தி உத்தியோகத்தர்
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

"பனை வளர்ப்போம்! பனையால் வளர்வோம்"

(இ-6285)


## முதல் வருட நினைவு

(30 – 10 – 1993)

### அமரர் அ. திருச்செல்வம்

(விடத்தல்தீவு)
(ஓய்வுபெற்ற ஆசிரியர், முன்னாள் சாந்தி தியேட்டர் பங்காளர்)

இறைவா இவரை உமது புனிதர்களின் தோழமையில் ஏற்றருளும்.

நாளை (30-10-93) சனிக்கிழமை காலை 6-15க்கு யாழ் பேராலயத்தில் நடைபெறும் இவரது ஆன்ம சாந்தித் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு தயவாய் வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள்.
உறவினர், சினேகிதர்.

15/26, மூனாய் ஒழுங்கை.
மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(27744)


## NEW ENGLISH ACADEMY

82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

### G.C.E. (O/L) (ENGLISH)

துரித மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்: 01 - 11 - 1993
(திங்கட்கிழமை)

| திங்கள் / வெள்ளி | செவ் / வியா |
|---|---|
| பிரிவு 1 - 3 — 4 30 | பிரிவு 3 - 3 — 4 30 |
| 2 - 4·30 — 6-00 | 4 - 4·30 — 6·00 |
| சனி / ஞாயிறு | |
| 7 - 9 00 — 10·30 | 5 - 9·00 — 10·30 |
| 8 - 10·30 — 12-00 | 6 - 10·30 – 12 00 |
| 9 - 2-00 — 3 30 | |
| 10 - 3-30 — 5·00 | |

ஆசிரியர்: திரு. R. சிவலிங்கம்
(Dip in -Eng.)

(குறைந்தது திறமைச் சித்திக்கான உத்தரவாதம் உண்டு. 30 - 10 - 1993 க்கு முன்பாக பதிவு செய்க)

(இ-6446)



## சிவாஜி

சாவகச்சேரி

1993 Aug.

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்:

30 - 10 - 93

சனி காலை 8 - 30

(இ-6445)



## NEW ENGLISH ACADEMY

(82, Po. Pedro Rd,
Ariyakulam).

★ SPOKEN ENGLISH WITH GRAMMAR
(3 மாதம்)
(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)

★ G.A.Q. (E.S.L.)
(6 மாதம்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
01–11–1993 (திங்கள்)

Lecturer;
R. SIVALINGAM
(Dip. in Eng.)

30 - 10 - 93 க்கு முன்பாக பதிவு செய்க

(இ-6447)



யாழ். இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வழங்கும்

## முழுநிலா அறிவியலரங்கு

இடம்: குமாரசுவாமி மண்டபம்
காலம்: 30—10—93 சனிக்கிழமை
நேரம்: மாலை 4.15 மணி

4·15—5·30 மணி
"ஆளுமை விருத்தி"
அருட்திரு. எஸ் டேமியன்
மருத்துவபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
செயலர்.

(இ-6288)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளைத் தலைமையகம்
வலிகாமம் மேற்குப் பிரிவு

## தையல் கண்காட்சியும், விற்பனையும்

இப்பிரிவின் இரண்டாவது தையல் கண்காட்சி 30-10-93, 31-10-93 ஆகிய தினங்களில் நடைபெறும்.

இடம்: யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

நேரம்: காலை 9 30 - மாலை 5·30வரை

30-10-93 காலை 10-00மணிக்கு முதலாம் (1993) அணியில் சித்திபெற்ற பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். அத்தருணம் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வேறு பிரிவு அங்கத்தவர்களையும் அழைக்கின்றோம்.

- கௌரவ செயலாளர்.

மாவடி,
வட்டுக்கோட்டை,
28-10-1993

(இ-6289)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பட்டோலையில் ஆகப் பிந்தியது

நாட்டு நிர்வாகத்தை — அரச நிர்வாகத்தை — அடிமட்டத்துக்குக் கொண்டு வருவதாகக் கூறி உருவாக்கப்பட்டவையே புதிய பிரதேச சபைகள். பிரதேச சபைகள் கூட்டிச் செயலகங்களாகச் செயற்படும் வகையில் முந்திய கச்சேரிகளின் — மாவட்ட அரச செயலகங்களின் — பணிகள் பலவும் பரவலாக்கப்பட்டுள்ளன.

முன்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக இருந்தவை இப்போது பிரதேச சபைகளாக மாறிவிட்டன. புதிதாகவும் பல பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அரசாங்கத் திணைக்களங்கள் எல்லாவற்றினதும் பிரிவுகள் பிரதேச சபைகளில் இயங்குகின்றன. நிதி தொடக்கம் கல்வி வரை, பிறப்புச் சாட்சிப்பத்திரம் பெறுவது முதல் கடவுச் சீட்டுப் பெறுவது வரை மக்களுக்குரிய பணிகள் யாவும் பிரதேச சபைகளுக்கு வந்து சேர்ந்துள்ளன.

மக்கள் தங்களுடைய சகல அலுவல்களையும் தாம் வாழும் பகுதியில் உள்ள பிரதேச சபையிலேயே செய்யக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. மாவட்டக் கச்சேரி — அரச அதிபர் — முறையை மாற்றி நிர்வாகத்தை பரவல் செய்யும் இந்தப் புதிய முறையினை ஆக்கியோன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா.

நிர்வாகத்தைப் பரவலாக்கும் புதிய முறை, தமிழர்களுக்கு நன்மை செய்வதைவிட, கெடுதலையே தந்திருக்கிறது. அண்மையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலாநிதி குணராசா இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள எழுபது பிரதேச சபைகளில் பதின்மூன்று சிங்களவர்களுக்குரியவை ஆக்கப்பட்டுள்ளன. தமிழர் பகுதியிலும் பிரதேச சபை நிர்வாகம் முழுதாகச் செயற்பட ஆரம்பிக்கும் போது, பதின்மூன்று பிரதேச சபைகள் அமைந்துள்ள நிலம் பறிபோய்விடும். இது தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட ஒரு சதி என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர், டி. எஸ். சேனநாயக்கா முதல் பிரேமதாசா வரை தமிழர் தாயகத்தைச் சிங்களப் பிரதேசமாக்கும் நோக்குடன் நடத்திய சிங்களக் குடியேற்றங்கள் தந்த விளைவு இது.

சிங்களத் தலைவர்கள் எந்த ஒரு புதிய திட்டத்தை அமுல் செய்யினும் அங்கே தமிழர்களுக்கு எதிரான ஓர் அரசியல் சதி மறைந்திருக்கும்; உள்ளுடலாகப் பொதிந்திருக்கும். கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்பது கிழக்கில் தமிழர் மண்ணைப் பறிக்கும் சதித் திட்டமாக அமைந்தது. புதிய தேர்தல் தொகுதிகளை உருவாக்குவது என்ற திட்டத்தின் கீழ் அம்பாறை, சேருவில என்ற தனிச்சிங்களத் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இந்தப் பட்டியலில், பட்டோலையில் ஆகக் கடைசியாகச் சேர்க்கப்பட்டிருப்பது பிரதேச சபை முறை.

வெளியே இனிக்கப் பேசி, தமிழர் பிரச்சினையை தீர்க்கும் வல்லமையும் விருப்பமும் உள்ளவராகக் காட்டிக் கொண்ட பிரேமதாசா, தமிழருக்குச் செய்த அநியாயத்தைப் பார்த்தீர்களா? பிரேமதாசா என்ன, எந்தச் சிங்களத் தலைவரும் சிங்கள - பௌத்த பேரினவாதம் என்ற ஒரே வார்ப்பில் உருவாகுபவர்களே. இவர்கள் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்குப் பதில் பறிப்பதிலேயே கருத்தாக இருந்தார்கள்! இருக்கிறார்கள், இருப்பார்கள்!

## யோகாசன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 28

அகில இலங்கை சர்வமத யோகாசன வித்தியாலயத்தாரால் மாதா மாதம் நடத்தப்படும் யோகாசன கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

செல்வி திருமகள் செபநாயகம், ரவி யோகிராஜன் ஆகியோர் கருத்தரங்கில் கருத்துரை வழங்குவார்கள். (க-17)

# தமிழ் மாணவர்களின் மனோநிலையை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்

## கண்டனக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 29

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கோரிக்கைகள் இந்தப் பேரணியின் விளைவாக உரியவர்களை எட்ட வேண்டும். தமிழ் மாணவர்களின் மனோ நிலையை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ச. பாலகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று நடத்திய பேரணி, யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து ஆரம்பமாகவிருந்த வேளை அங்கு நடந்த கண்டனக் கூட்டத்தில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்- பல்கலைக்கழக அனுமதி முறை தமிழ் பல்கலைக்கழகங்களினதும், தமிழ் மாணவர்களினதும் எதிர்காலத்தை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கும் வகையில் அமைந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் வெற்றிடங்கள் இருந்தும் மாணவர்கள் அனுமதிக்கப்படாதிருப்பது பல்கலைக்கழகத்துக்கு நிதிப் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. ஏனென்றால் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்பவே அதற்கான நிதியும் ஒதுக்கப்படுகிறது - என்றார்.

மருத்துவ பீடாதிபதி, பேராசிரியர் பாலசுப்பிரமணியம், சிரேஷ்ட விரிவுரையாளர் சத்குணராசா, மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர், யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (அ-5)

## விரிவுரைகள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் நேற்று தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். பல்கலைக்கழக அனுமதி கிடைக்காது பாதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று நகரில் நடத்திய கண்டனப் பேரணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்தே அவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். (அ-5)

## கால்நடை வைத்திய பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக். 29

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 21 இளைஞர்களுக்கு கால்நடை சுகாதார முதலுதவிப் பயிற்சி நெறியொன்று அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கிளிநொச்சி வட்டக்கச்சி அரச பண்ணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி உதவி விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் திரு. சுப்பிரமணியம், பூநகரி மிருக வைத்திய உத்தியோகத்தர் திருமதி நவரட்ணராஜா, அரச பண்ணை உத்தியோகத்தர்கள் மற்றும் வன்னி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கடந்த வருடமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் கிளிநொச்சி விவசாய பீடத்தில் இரண்டு கட்டமாக நடைபெற்ற இப்பயிற்சித் திட்டத்தில் சுமார் 45 பயிற்சியாளர்கள் பயிற்சியினை முடித்துக் கொண்டு வெளியேறியிருந்தனர். இவர்கள் மிருக வைத்தியத் திணைக்களத்துடன் இணைந்து கிராமங்களுக்குச் சென்று தடுப்பூசி ஏற்றும் பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

தற்போதைய பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டுள்ள பயிற்சியாளர்களுக்கு கால்நடை சுகாதாரம், முதலுதவி, கால்நடை வளர்ப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய ஒரு மாத கால பயிற்சி நடைபெற்று வருகிறது. பயிற்சி முடிவடைந்ததும் இவர்கள் ஒவ்வொரு மாவட்ட, கோட்டங்களினதும் கிராமங்களுக்குச் சென்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வழி நடத்தலில் அவைய வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஆண்டு விழாவும் விளையாட்டு போட்டிகளும்

தெல்லிப்பழை, ஒக். 29

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 33 ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை [illegible] முனை மைதானத்தில் நடைபெறவுள்ள விழாவில் மரதன் ஓட்டம், இரண்டு மைல் வேக நடை, விநோத உடைப் போட்டி என்பனவும் ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்களின் வீரசாகச நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (இ-5-109-9/)

## ஆலயங்களில்

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இன்று ஐப்பசி இரண்டாவது வெள்ளிக்கிழமையை ஒட்டி விசேட வழிபாடும் சுவாமி வீதியுலாவும் நிகழும். பின்னர் பிரம்மஸ்ரீ ச. சண்முகரத்தின சர்மா எழுதிய "வேலவர் தந்தது" நூல் வெளியீட்டு விழா நடைபெறும். அனைவருக்கும் நூல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-28)

## சிங்கள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத அச்சத்தில் தமிழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கை அரசு ஆபத்தான வழியை பின்பற்றி வருகிறது. யுத்தத்தை மேலும் நடத்துவது என்ற முனைப்பு அரசுக்கு உள்ளது.

அரசின் இந்தப் போக்கில் உள்ள ஆபத்து அதிகம்: வெற்றிபெற்றால் பரிசும் மிக மிகப் பெரிதாக இருக்கும்.

## அனுமதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடம் ஊடாக கோவில் வீதியை அடைந்த பேரணி யாழ். செயலகத்தை அடைந்து, அங்கிருந்து கச்சேரி - நல்லூர் வீதி வழியாக கல்வி அலுவலகத்தை அடைந்து மீண்டும் பல்கலைக்கழகத்தை அடைந்தது.

மகஜர்கள்

பேரணியில் சென்ற மாணவர்கள், அதிகாரிகளான ஐ. நா. தூதரக யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. ஜே. ஏ. அசோக்குமாரிடமும்,

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பிலைப் கைலஸரிடமும் -

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போலிடமும் - மகஜர்களை கையளித்தனர்.

ஜனாதிபதி, பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவர் ஆகியோருக்கு தனித்தனியாக விலாசமிடப்பட்ட மகஜர்களைப் பெற்றுக் கொண்ட மேலதிக அரச அதிபர், மாணவர்களின் நியாயமான கோரிக்கையையிட்டுத் தாம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும்.

மாணவர்களின் மகஜர்களை உடனடியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்வதாகவும் - கூறினார்.

உயர் கல்வி அமைச்சருக்கான மகஜர் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

பேரணி நடந்த வேளை அதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை தமிழீழ காவல் துறையினரும், செஞ்சிலுவைச் சங்கத்தினரும் கவனித்தனர்.

கொழும்புச் செய்தியாளர்

மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி நடந்த போது வெளிநாட்டுச் செய்தி ஏஜென்சிகளின் செய்தியாளர்கள் அதனை நேரில் சென்று பார்வையிட்டு, புகைப்படம் மற்றும் வீடியோப் படங்களைப் பிடித்துக் கொண்டனர்.

மாணவர்கள் பலரிடம் பேரணியின் நோக்கத்தையும், விளக்கத்தையும் கேட்டுக் கொண்டனர்.

நேற்றும் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் நடைபெறாத போதிலும், தனியார் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன. (அ-8-17-15-148)

## ஏற்ற இடங்களில் மரம் நடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 29

மரம் நடுகைவாரம் கடந்த 26 ஆம் திகதியில் இருந்து யாழ். குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மரக்கன்றுகள் நடப்படுவதற்கு இக்கால நிலை உகந்ததாகக் காணப்படுவதால் ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபரும் தத்தமது பிரிவில் உள்ள கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் மூலம் ஏற்ற இடங்களில் மரக்கன்றுகளை நட வேண்டும். இப்படி யாழ். பிரதி மாவட்ட ஆணையாளர் திரு. த. வைத்திலிங்கம் கோரி உள்ளார்.

யாழ். வனபரிபாலன திணைக்களத்தில் உள்ள நாற்று மேடைகளில் மரக்கன்றுகள் உள்ளன. அதற்குத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் மரக்கன்றுகள் நடுவதற்கென அமைக்கப்பட்ட சிமெந்துக் கூடுகள் மரமின்றி காட்சி அளிப்பதால் அவ்விடங்களில் மீண்டும் மரங்களை நடமுடியும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# வெட்டுப்புள்ளிகளை குறைத்து விசேட சலுகை வழங்குக

## பாதிக்கப்பட்ட மாணவர் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஒக். 29

எமது மாவட்டம் ஒரு யுத்த பிரதேசமாக இருப்பதை மனதில் கொண்டு வெட்டுப் புள்ளிகளை குறைத்து எமக்கு சில விசேட சலுகைகளை வழங்குமாறு நாம் தயவாக உங்களை வேண்டிக் கொள்கிறோம். கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட சராசரி மாணவர் எண்ணிக்கையை பேணினால் இவ்வாண்டில் கூடுதலான தமிழ் மாணவர்கள் அனுமதி பெறுவார்கள் என்பது நிச்சயம்.

— 1992 ஆம் 93 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதியால் பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற பாதிக்கப்பட்ட மாணவரின் கண்டனப் பேரணியின் போது கையளிக்கப்பட்ட அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

கடந்த ஐந்து ஆண்டுகளிலே பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 92/93 ஆம் கல்வி ஆண்டுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் மொத்தத் தொகை மிகவும் குறைவானது. இது மிகவும் அசாதாரணமான ஒரு நிலை என்றே நாம் கருதுகின்றோம்.

இந்த அசாதாரண நிலைக்கு 1991/92 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ் மாவட்டத்தில் நிலவிய சூழலே காரணம் என்பது யாவரும் அறிந்த விடயம்.

மாணவர்கள் எத்தனையோ கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது. ஒரு புறம் மின்சாரம் இல்லை. மறுபுறம் மண்ணெண்ணெய் விநியோகம் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் விலையும் அதிகமாக காணப்பட்டது. உணவுப் பற்றாக் குறையினால் மாணவர்கள் கடினமாக படிக்க வேண்டியதற்குத் தேவையான உடல் நிலையைப் பெற்றிருக்க முடியவில்லை.

விமானத் தாக்குதலால் அடிக்கடி பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அத்துடன் இடம் பெயர்ந்த மாணவர்களால் பாடசாலைகளில் மேலதிக மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். போக்குவரத்து வசதிகள் இன்மையால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு பல சிரமங்களை எதிர் நோக்கினர்; அத்துடன் தமது வீடுகளில் இருந்தும் கிராமங்களில் இருந்தும் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவை யாவற்றிற்கும் மேலாக எந்நேரமும் விமானத் தாக்குதலோ, எறிகணைத் தாக்குதலோ நடத்தப்படலாம் என்ற பீதியினால் மாணவர்கள் மனோ நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டு இருந்தது. [illegible] இவற்றைத் தவிர தமிழ் மாணவர்களது வினாத்தாள்கள் கடினமானதாகவும் விநோதமானதாகவும் இருந்ததாக பெரும்பான்மையான மாணவர்கள் கருதுகின்றனர். வினாத்தாள்களைத் திருத்துவதிலும் வேண்டும் என்றே கெடுபிடிகள் இருந்ததாக மாணவர்கள் சிலர் கருதுகின்றனர். இக்காரணங்கள் எல்லாவற்றின் அடிப்படையில் தான் எமது மாணவர்கள் சோதனையில் திறமையாக செயற்பட முடியவில்லை என நாம் கருதுகின்றோம்.

1985 ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகள் பின்னர் இலங்கை ரீதியாக குறைக்கப்பட்டதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஏனெனில் அவ்வாண்டில், மாணவர்கள் பரீட்சையில் தமது பூரண திறமையைக் காட்டியிருக்க முடியாமையினால் ஆகும். இதனை ஒரு முன் உதாரணமாகக் கொண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளுக்கான வெட்டுப்புள்ளியை விசேட சலுகை அடிப்படையில் குறைக்குமாறு உங்களைத் தயவாகக் கேட்கின்றோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

**மரம் ஒரு பிராணவாயுத் தொழிற்சாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

